# TNPSC (தொகுதி–IV) ஒரிஜினல் வினாத்தாள்–2005

## பொது அறிவு

1. cot 63° 20' என்பது எதற்கு சமமானது?
A) tan 26° 40'  B) sin 63° 20'
C) tan 63° 20'  D) sin 26° 40'

2. $\frac{4}{7}, \frac{1}{3}, \frac{5}{11}$ மற்றும் $\frac{2}{11}$ ஆகிய பின்னங்களில் சிறியது எது?
A) $\frac{4}{7}$  B) $\frac{1}{3}$
C) $\frac{5}{11}$  D) $\frac{2}{11}$

3. ஒரு கடிகாரம் ஒவ்வொரு மணிக்கும் பொருத்தமான முறை அடிக்குமானால், அது ஒரு முழுச் சுற்றுக்கு எத்தனை முறை அடிக்கும்?
A) 12  B) 24
C) 48  D) 78

4. நேர்வட்ட கூம்பின் ஆரம் r, உயரம் h மற்றும் சாயுயரம் l எனில், அதன் மொத்தப் புறப்பரப்பானது
A) $\pi r^2$ சதுர அலகுகள்
B) $\pi rl$ சதுர அலகுகள்
C) $\pi r(l + r)$ சதுர அலகுகள்
D) $\frac{1}{3}\pi r^2 h$ சதுர அலகுகள்

5. 2, 4, 8, .............. என்ற பெருக்குத் தொடரில் எட்டு உறுப்புகளின் கூடுதல் காண்.
A) 80  B) 160
C) 320  D) 510

6. ஒரு கோட்டில் அமையாத மூன்று புள்ளிகள் வழியாக எத்தனை வட்டங்கள் வரையலாம்?
A) ஒன்று  B) இரண்டு
C) மூன்று  D) எண்ணற்றவை

7. புள்ளி (1,1) என்பது $7x - 5y = k$ என்ற நேர்கோட்டின் வழி செல்லுமானால், k-ன் மதிப்பு என்ன?
A) $k = 0$  B) $k = 1$
C) $k = 2$  D) $k = 3$

8. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்களில் அடுத்த எண் எது?
1, 4, 9, 61, 52, 63.
A) 94  B) 43
C) 126  D) 131

9. முதல் இந்திய விண்வெளி வீரர்
A) ராகேஷ் சர்மா  B) எம்.எஸ்.வர்மா
C) பி.சி.சென்  D) இவர்களில் எவருமிலர்

10. இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி
A) டாக்டர் அப்துல் கலாம்
B) செல்வி ஜெ.ஜெயலலிதா
C) மு.கருணாநிதி
D) இவர்களில் எவருமிலர்

11. 2006–க்கான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்டவற்றுள் எங்கே நடைபெற்றன?
A) ஜப்பான்
B) கிரீஸ்
C) இத்தாலி
D) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

12. F1 கார் பந்தயத்தில் பங்கு பெற்ற ஒரே ஓர் இந்தியர்
A) நரேன் கார்த்திகேயன்  B) அபய்
C) அஜித்  D) அஸ்வின்

13. லாக்டோமீட்டர் என்னும் கருவி எதன் தரத்தை காண பயன்படுகிறது?
A) ஆல்கஹால்  B) நீர்
C) எண்ணெய்  D) பால்

14. கனிம தாதுக்களின் சோதனை ஆய்வு மையத்தின் (MECL) தலைமையிடம் எங்குள்ளது?
A) புது டெல்லி  B) பெங்களூர்
C) சென்னை  D) நாக்பூர்

15. கீழேயுள்ள எந்த ஒன்று அமைதியாகக் கொல்லும் நோய் என அழைக்கப்படுகிறது?
A) இரத்த அழுத்தம்
B) எலும்புருக்கி நோய்
C) காலரா
D) மலேரியா

16. பெங்குவின் எங்கு அதிகமாக காணப்படுகிறது?
A) கனடா
B) ரஷ்யா
C) ஐக்கிய அமெரிக்க நாடுகள்
D) அன்டார்டிகா

17. 'சைலன்ட் வேலி' திட்டம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
A) மேற்கு வங்காளம்  B) கேரளா
C) சிக்கிம்  D) மகாராஷ்டிரா

18. ஒரு கிராம் தோட்ட மண்ணில் காணப்படும் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை
A) 1 மில்லியன்
B) 100 மில்லியன்
C) 500 மில்லியன்
D) 1 பில்லியன் மற்றும் அதிகமாக



www.recruitmentguru.com

19. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு :

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| a) ஏதோர் | 1) அர்ஜுனா விருது |
| b) சானியா மிர்சா | 2) இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது |
| c) கனிதா ஷர்மா | 3) தயான் சந்த் விருது |
| d) ராஜீந்தர் சிங் | 4) துரோணாச்சார்ய விருது |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 3 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 1 | 4 | 2 |

20. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு :

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| a) இரவிந்திரநாத் தாகூர் | 1) பொருளியல் |
| b) சி.வி.இராமன் | 2) மருத்துவம், உடற்கூறு |
| c) அமர்தியா சென் | 3) இயற்பியல் |
| d) ஹர்கோபிந்த் குரானா | 4) இலக்கியம் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 4 | 3 | 1 | 2 |

21. குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவி காலியாக இருக்கும் போது, குடியரசுத் தலைவரின் பணியினைச் செய்வது
A) மக்களவை சபாநாயகர்
B) பிரதம அமைச்சர்
C) தலைமை நீதிபதி
D) மாநிலங்களவையின் துணைத் தலைவர்

22. இந்திய மத்திய அரசாங்கத்தை தலைமையேற்று நடத்துபவர்
A) குடியரசுத் தலைவர் B) பிரதம மந்திரி
C) அமைச்சரவை D) பாராளுமன்றம்

23. பொதுவாக அனைத்து முக்கிய முடிவுகளையும் எடுப்பது
A) அமைச்சர் குழு
B) காபினெட்
C) பிரதம அமைச்சர்
D) பிரதம அமைச்சர் மற்றும் பாராளுமன்ற செயலர்கள்

24. மத்திய அமைச்சரவைக் குழுவின் கூட்டத்தை தலைமையேற்று நடத்துபவர்
A) குடியரசுத் தலைவர் B) துணை குடியரசுத் தலைவர்
C) பிரதம அமைச்சர்
D) அமைச்சர் குழுவின் ஏதேனும் ஓர் அங்கத்தினர்

25. மக்களவையைக் கலைக்க அதிகாரம் பெற்றவர் யார்?
A) பிரதம அமைச்சர் B) குடியரசுத் தலைவர்
C) சபாநாயகர் D) தேர்தல் ஆணையர்

26. மாநிலங்களவையின் தலைவர்
A) துணை குடியரசுத் தலைவர்
B) சபாநாயகர்
C) துணை சபாநாயகர்
D) குடியரசுத் தலைவர்

27. இந்திய குடியரசுத் தலைவர் எந்த தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
A) மறைமுகத் தேர்தல் B) இடைத் தேர்தல்
C) உப தேர்தல் D) நேரடித் தேர்தல்

28. தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பு (SAARC) எந்த ஆண்டில் ஏற்பட்டது?
A) 1984 B) 1990
C) 1988 D) 1985

29. அரசியலமைப்பு, சுரண்டலுக்கு எதிரான உரிமை வழங்கியிருப்பது
A) குழந்தைகளுக்கு B) பெண்களுக்கு
C) மலைவாழ் மக்களுக்கு D) தலித்துகளுக்கு

30. இவற்றில் எந்த நாடு தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பில் (SAARC) உறுப்பு நாடாக இல்லை?
A) பூட்டான் B) பங்களாதேஷ்
C) பர்மா D) மாலத்தீவுகள்

31. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
துணிபு (A) : ஹரப்பா நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் என அழைக்கப் படுகிறது.
காரணம் (R) : ஹரப்பா நாகரிகம் சிந்து நதிக் கரையில் வளர்ச்சியடைந்தது.
கீழ்க்காணும் குறியீடு மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமில்லை.
C) (A) சரி; ஆனால் (R) தவறு.
D) (A) தவறு; ஆனால் (R) சரி.

32. கிருஷ்ண தேவராயர் மிகச் சிறந்தவராகக் கருதப்படக் காரணம்
A) அவரது வெற்றிகள்
B) அவர் இலக்கியம், கலைக்கு ஆற்றிய தொண்டு
C) சமய சகிப்புத்தன்மை
D) போர்த்துகீசியருடன் நட்பு



www.recruitmentguru.com

33. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க :
I. சிவாஜி சிறந்த படைத்திறன் மிக்க ஒருவர்
II. சிவாஜி மராத்தியப் பேரரசினை உருவாக்கினார்
III. சிவாஜி சமய சகிப்பு தன்மையுள்ளவர்
IV. சிவாஜி உழவர்களிடம் தாராளமாக நடந்து கொண்டார்
இவற்றில் :
A) I மட்டும் சரியானது
B) I மற்றும் II சரியானவை
C) I, II மற்றும் III சரியானவை
D) அனைத்தும் சரியானவை

34. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு :

| | பட்டியல் – I | | பட்டியல் – II |
|---|---|---|---|
| a) | காந்தாரக்கலை | 1) | சுங்கர்கள் |
| b) | பர்கூர் | 2) | இராட்டிரகூடர்கள் |
| c) | கைலாசநாதர் கோயில் | 3) | குப்தர்கள் |
| d) | தியோகர் கோயில் | 4) | குஷாணர்கள் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 3 | 2 | 4 |

35. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்தியுள்ளது?
A) அர்த்தசாஸ்திரம் – மெகஸ்தனிஸ்
B) சத்திய சோதனை – அம்பேத்கார்
C) ஹர்ஷ சரிதம் – கௌடில்யர்
D) காளிதாசர் – குமார்சம்பவம்

36. ரிக் வேதத்தில் அடங்கியுள்ளவை
A) 1028 பாடல்கள் B) 1000 பாடல்கள்
C) 2028 பாடல்கள் D) 1038 பாடல்கள்

37. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு :

| | பட்டியல் – I | | பட்டியல் – II |
|---|---|---|---|
| a) | ஆரிய சமாஜம் | 1) | இராமலிங்க சுவாமிகள் |
| b) | பிரார்த்தனை சமாஜம் | 2) | கர்னல் ஆல்காட் |
| c) | சுத்த சன்மார்க்க சமாஜம் | 3) | சுவாமி தயானந்தர் |
| d) | தியாசபிகல் சொசைட்டி | 4) | ஆத்மராம் பாண்டுரங் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 1 | 2 | 4 | 3 |

38. காவிரி ஆற்றின் குறுக்கில் கல்லணையைக் கட்டியவர் யார்?
A) முதலாம் இராஜராஜ சோழன்
B) கரிகால சோழன்
C) முதலாம் இராஜேந்திர சோழன்
D) சேரன் செங்குட்டுவன்

39. மகாபலிபுரத்தை நிறுவியவர்கள்
A) பாண்டியர்கள் B) பல்லவர்கள்
C) சோழர்கள் D) சாளுக்கியர்கள்

40. குடுமியான்மலை கல்வெட்டு படம் பிடித்துக் காட்டுவது
A) கட்டடக் கலை B) நாட்டியம்
C) இசை D) கல்வி

41. பசை மின்கலத்தில் (Dry Cell) நேர் மின்வாய் என்பது
A) துத்தநாகம் B) கார்பன்
C) தாமிரம் D) $PbO_2$

42. நிறப்பிரிகை நிகழ்வில் அதிகமாக விலகலடையும் நிறம்
A) சிவப்பு B) பச்சை
C) நீலம் D) ஊதா

43. $-13°C$ வரையிலான குறை வெப்பத்தை உருவாக்க உறைக் கலவையில் பனிக்கட்டி மற்றும் உப்புகளின் விகிதம்
A) 1 : 3 B) 2 : 1
C) 3 : 1 D) 1 : 2

44. பின்வருவனவற்றில் எது, மின்காந்த தன்மை அற்றது?
A) காமாக் கதிர்கள் B) X-கதிர்கள்
C) ஆல்பாக் கதிர்கள் D) புறஊதாக் கதிர்கள்

45. மூலக்கூறு எல்லையின் வீச்சு
A) $10^{8}$ செ.மீ. B) $10^{-8}$ செ.மீ.
C) $10^{8}$ மீ. D) $10^{-8}$ மீ.

46. நீல லிட்மஸ் தாளை சிவப்பாக மாற்றுவது எது?
A) சோடியம் கார்பனேட்
B) சோடியம் ஹைட்ராக்சைடு
C) அசிட்டிக் அமிலம்
D) அசிட்டால்டிஹைடு

47. $2SO_2$ (வாயு) + $O_2$ (வாயு) $\rightleftharpoons 2SO_3$ (வாயு) – வினைக்கு சமநிலை மாறிலியின் ( $K_C$ ) மதிப்பு

A) $K_C = \frac{[SO_2]^2 [O_2]}{[SO_3]^2}$

B) $K_C = \frac{[SO_2][O_2]}{[SO_3]}$

C) $K_C = \frac{[SO_3]}{[SO_2][O_2]}$

D) $K_C = \frac{[SO_3]^2}{[SO_2]^2 [O_2]}$



www.recruitmentguru.com

48. சிறந்த கம்பியாக நீட்டப்படும் உலோகங்கள் எவை?
- A) அலுமினியம், பிளாட்டினம்
- B) தங்கம், வெள்ளி
- C) காப்பர், அலுமினியம்
- D) இரும்பு, நிக்கல்

49. கீழ்வரும் பயன்களை படித்தறிந்து மிகச் சரியானதைத் தேர்ந்தெடு :
- I. அரிக்கும் தன்மையை தடுக்கும் பெயிண்ட் தயாரிக்க அலுமினிய பவுடர் பயன்படுகிறது
- II. உணவுப் பொருட்களை மூடி பாதுகாக்க அலுமினிய பவுடர் பயன்படுகிறது.
- III. மின்கம்பிகள் செய்ய அலுமினிய பவுடர் பயன்படுகிறது
- IV. ஆகாய விமான உதிரி பாகம் தயாரிக்க அலுமினிய பவுடர் பயன்படுகிறது

இவற்றில் :
- A) அனைத்தும் சரியானவை
- B) I மற்றும் II சரியானவை
- C) II மற்றும் III சரியானவை
- D) I மட்டும் சரியானது

50. ஓரிணைய ஆல்கஹாலின் பொதுவான வாய்பாடு

A) 

B) 

C) 

D) 

51. தமிழ்நாட்டில் 2001–ல் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி கல்வியறிவு பெற்றவர்கள் ............ சதவிகிதத்தினர்.
- A) 72.5%
- B) 71.5%
- C) 73.5%
- D) 70.5%

52. அக்னி ஏவுகணை எந்த மாநிலத்திலிருந்து ஏவப்பட்டது?
- A) ஆந்திரப்பிரதேசம்
- B) கர்நாடகா
- C) கேரளா
- D) ஒரிஸ்ஸா

53. ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டு போட்டியில் இந்தியா கடைசியாக தங்கப் பதக்கம் வென்றது
- A) 2000–சிட்னி
- B) 1996–அட்லாண்டா
- C) 1980–மாஸ்கோ
- D) 1972–மியூனிச்

54. இந்தியாவில் 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி பெண்கள் எழுத்தறிவு குறைவான மாநிலம்
- A) பீஹார்
- B) ஜார்கண்ட்
- C) மத்தியப்பிரதேசம்
- D) இராஜஸ்தான்

55. உலகின் கூரை
- A) ரோம்
- B) பாமீர்
- C) பாலமர் மலை
- D) டாக்கா

56. "மெயின் கேம்ப்" என்னும் புத்தகத்தை எழுதியது
- A) அடால்ஃப் ஹிட்லர்
- B) அலெக்சாண்டர்
- C) லெனின்
- D) கார்ல் மார்க்ஸ்

57. இந்தியாவில் முப்படைகளின் தளபதி (கடற்படை, தரைப்படை, விமானப்படை) யார்?
- A) பாதுகாப்பு மந்திரி
- B) பிரதம மந்திரி
- C) குடியரசுத் தலைவர்
- D) துணை குடியரசுத் தலைவர்

58. தற்பொழுது இந்தியாவில் .................. உள்ளன.
- A) 25 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்கள்
- B) 24 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்
- C) 28 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்
- D) 21 மாநிலங்கள் மற்றும் 11 யூனியன் பிரதேசங்கள்

59. இரு எண்களின் கூடுதல் 25, வித்தியாசம் 15 எனில், அந்த எண்கள் யாவை?
- A) 25, 15
- B) 20, 5
- C) 10, 15
- D) 30, –5

60. $A = \{4, 7, 9\}$ ; $B = \{8, 10\}$ ; $C = \{6, 7, 10\}$ எனில் $(A - B) \cup (A - C)$ காண்க.
- A) $\{4, 7, 9\}$
- B) $\{8, 10\}$
- C) $\{4, 7\}$
- D) $\{6, 7, 10\}$

61. இந்தியாவில் கோதுமை உற்பத்தி அதிகமாக ஏற்படுத்தும் மாநிலங்கள்
- A) உத்திர பிரதேசம், பஞ்சாப், மகாராஷ்டிரா
- B) உத்திர பிரதேசம், கர்நாடகம், மேற்கு வங்காளம்
- C) உத்திர பிரதேசம், பஞ்சாப், மேற்கு வங்காளம்
- D) உத்திர பிரதேசம், பஞ்சாப், மத்திய பிரதேசம்

62. சாதக வணிக நிலை என்பது
- A) அதிகமான இறக்குமதி
- B) அதிகமான ஏற்றுமதி
- C) சமநிலை இறக்குமதி ஏற்றுமதி
- D) இவற்றுள் எதுவுமில்லை

63. 2001–02இல் இந்தியாவின் தனிநபர் வருமானம்
- A) ரூ. 16,500
- B) ரூ. 16,707
- C) ரூ. 17,500
- D) ரூ. 17,977

64. 2002இல் தமிழகத்தின் இறப்பு வீதம்
- A) 44/1000
- B) 46/1000
- C) 47/1000
- D) 51/1000

65. தமிழ்நாட்டில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை பின்வரும் இடத்தில் உள்ளது
- A) நெய்வேலி
- B) வேலூர்
- C) மணலி
- D) ஆவடி

66. தேசிய பங்கு மாற்றகம் எங்கு செயல்படுகிறது?
- A) டெல்லி
- B) மும்பை
- C) நாக்பூர்
- D) கொல்கத்தா



www.recruitmentguru.com

67. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
A) 1930 B) 1935
C) 1949 D) 1950

68. இந்தியாவில் முதன்முதலில் துவங்கப்பட்ட இரயில் வண்டிப்பாதை
A) பம்பாயிலிருந்து சென்னை வரை
B) சென்னையிலிருந்து கல்கத்தா வரை
C) பம்பாயிலிருந்து தானே வரை
D) டெல்லியிலிருந்து சென்னை வரை

69. போக்குவரத்து, கல்வி, நலவாழ்வு, வீட்டு வசதி ஆகியவை எவ்வகை எனக் கருதப்படுகிறது?
A) சேவைகள் B) நில அமைப்பு
C) கலாச்சாரம் D) தொழில்கள்

70. தமிழ்நாட்டின் நுழைவாயில்
A) சென்னை B) தூத்துக்குடி
C) கன்னியாகுமரி D) திருச்சி

71. கீழ்க்கண்டவற்றில் எது சரியாகப் பொருந்தியுள்ளது?
A) சிப்பாய் கலகம் – 1757
B) ரௌலட் சட்டம் – 1927
C) வெள்ளையனே வெளியேறு இயக்கம் – 1942
D) தண்டி யாத்திரை – 1940

72. இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர்
A) தாதாபாய் நௌரோஜி
B) சுரேந்திரநாத் பானர்ஜி
C) பிரோஸ் ஷா மேத்தா
D) உமேஷ் சந்திர பானர்ஜி

73. கி.பி.1917இல் சம்பரான் அறப்போரில் பங்கேற்றவர்
A) பால கங்காதர திலகர்
B) கோபால கிருஷ்ண கோகலே
C) ஜவஹர்லால் நேரு
D) காந்திஜி

74. சௌரி சௌரா படுகொலை எந்த ஆண்டு நடைபெற்றது?
A) 1921 B) 1922
C) 1920 D) 1924

75. கீழ்க்கண்டவற்றில் சரியான வரிசை முறையைக் கண்டுபிடி :
A) மின்டோ–மார்லி சட்டம், தன்னாட்சி இயக்கம், உப்புச் சத்தியாகிரகம், அமைச்சரவைத் தூதுக்குழு
B) மின்டோ–மார்லி சட்டம், அமைச்சரவைத் தூதுக்குழு, தன்னாட்சி இயக்கம், உப்புச் சத்தியாகிரகம்
C) தன்னாட்சி இயக்கம், மின்டோ–மார்லி சட்டம், உப்புச் சத்தியாகிரகம், அமைச்சரவைத் தூதுக்குழு
D) அமைச்சரவைத் தூதுக்குழு, தன்னாட்சி இயக்கம், மின்டோ–மார்லி சட்டம், உப்புச் சத்தியாகிரகம்

76. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு :

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| a) தீவிரவாதி | 1) பிரோஸ் ஷா மேத்தா |
| b) மிதவாதி | 2) சி.ஆர்.தாஸ் |
| c) பயங்கரவாதி | 3) பாலகங்காதர திலகர் |
| d) சுயராஜ்யர் | 4) வ.வே.சு. ஐயர் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 3 | 1 | 4 | 2 |

77. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
துணிபு (A) : வன்முறை தவிர்த்தல் வலுவுள்ளவர் ஆயுதமேயன்றி வலிமையற்றோர் ஆயுதமன்று
காரணம் (R) : வன்முறை நீக்கியே வலிமை மிக்க பிரிட்டன் பேரரசிலிருந்து இந்தியா விடுதலை பெற்றுள்ளது.
இவற்றுள்
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமில்லை.
C) (A) சரி; ஆனால் (R) தவறு.
D) (A) தவறு; ஆனால் (R) சரி.

78. வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒரு புகழ்பெற்ற இந்தியனாக இருப்பதற்குக் காரணம்
A) ஆங்கிலேயரின் பவள ஆலையில் வேலைநிறுத்தத்தை ஏற்படுத்தினார்
B) சுதேசி கப்பல் நிறுவனம் ஒன்றை முதன்முதலில் நிறுவியவர்
C) கடுங்காவல் தண்டனையால் துன்பப்பட்டார்
D) இலக்கியங்களின்பால் அக்கறை காட்டினார்

79. கி.பி.1947இல் இந்தியா விடுதலை பெற்றபோது சென்னை சட்டசபையின் தலைவராக இருந்தவர் யார்?
A) டி. பிரகாசம்
B) இராஜாஜி
C) ஓ.பி. இராமசாமி ரெட்டியார்
D) காமராஜர்

80. வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு எப்பொழுது வந்தார்?
A) 1923 B) 1927
C) 1922 D) 1924

81. வைரஸ்களின் மரபுப் பொருட்கள்
A) இரு இழை DNA B) ஒரு இழை DNA
C) RNA D) இவை அனைத்தும்


www.recruitmentguru.com

82. கீழ்க்கண்ட வரைபடத்தில் உள்ள மைட்டாஸிஸின் நிலை என்ன?



A) தொடக்கநிலை B) நடுநிலை
C) பின்னடைதல் நிலை D) முடிவு நிலை

83. கீழ்காணும் தானியங்களில் எது மனிதனால் முதலில் உபயோகிக்கப்பட்டது?
A) பார்லி B) ஓட்ஸ்
C) ரை D) கோதுமை

84. பாக்டீரியாவை தாக்கும் வைரஸ்கள்
A) ஆர்போவைரஸ்கள் B) வைரேமியா
C) பாக்டிரியோஃபேஜ் D) பாக்டோஃபென்

85. எய்ட்ஸ் நோய் பரவுவதற்கான காரணம்
A) இரத்தம் மாற்றுதல், கொசு கடித்தல், எச்சில் மூலம்
B) உறுப்பு மாற்றுதல், கைக்குலுக்கும்போது, இரத்தம் மாற்றுதல்
C) எச்.ஐ.வி. பாதிப்பு ஏற்பட்டவருடன் உடலுறவை மேற்கொள்ளுதல், எச்சில் மூலம், கைக்குலுக்கும்போது
D) இரத்தம் மாற்றுதல், எச்.ஐ.வி. பாதிப்பு ஏற்பட்டவருடன் உடலுறவை மேற்கொள்ளுதல், உறுப்பு மாற்றுதல்

86. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறிக :
A) பித்த உப்புக்கள் – சிறு திவ்வளை களாக்குதல்
B) வெள்ளையணுக்கள் – நோய் எதிர்ப்புத் தன்மை
C) நெப்ரான் – நரம்பு மண்டலம்
D) மாலைக்குருடு – வைட்டமின் 'ஏ'

87. டி.என்.ஏ. மூலக்கூறு சுருளின் விட்டம்
A) 20 Å B) 30 Å
C) 40 Å D) 50 Å

88. பல உணவுச் சங்கிலிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்ட சிக்கலான அமைப்பு
A) உணவு பிரமிடு B) உணவு உலகம்
C) உணவு ஆற்றல் D) உணவு வலை

89. எய்ட்ஸ் நோயினை உறுதி செய்யும் சோதனை
A) எலைசா சோதனை
B) வெஸ்டன் பிளாட் சோதனை
C) அமில–கார சோதனை
D) இவற்றுள் எதுவுமில்லை

90. இரத்த சோகையின் போது
A) வெள்ளை அணுக்கள் அதிகரிக்கின்றன
B) சிவப்பு இரத்த அணுக்கள் குறைகின்றன
C) சிவப்பு இரத்த அணுக்கள் அதிகரிக்கின்றன
D) வெள்ளை அணுக்கள் குறைகின்றன

91. தமிழ்நாட்டில் பெட்ரோலியம் கிடைக்கப் பெறும் டெல்டா பகுதி
A) தாமிரபரணி B) வைகை
C) காவிரி D) பாலாறு

92. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி மையம்
A) கும்பகோணம் B) ஆடுதுறை
C) தஞ்சாவூர் D) பாபநாசம்

93. தமிழ்நாடு பின்வரும் பருவகாலத்தில் அதிக மழை அளவைப் பெறுகிறது
A) வடகிழக்கு மழைப் பருவகாலம்
B) தென்மேற்கு மழைப் பருவகாலம்
C) கோடைகாலம்
D) குளிர்காலம்

94. இந்தியாவில் தென்மேற்கு பருவக்காற்று காலம்
A) ஜூன் முதல் செப்டம்பர் வரை
B) ஜனவரி முதல் மார்ச் வரை
C) ஏப்ரல் முதல் அக்டோபர் வரை
D) அக்டோபர் முதல் பிப்ரவரி வரை

95. பாலகாட்டு கணவாய் இந்த மலைத் தொடரில் அமைந்துள்ளது
A) கிழக்கு தொடர்ச்சி மலைகள்
B) விந்திய மலைத் தொடர்கள்
C) சாத்பூரா மலைத் தொடர்கள்
D) மேற்கு தொடர்ச்சி மலைகள்

96. அரபிக் கடலை நோக்கி பாய்ந்து செல்லும் ஆறுகள்
A) நர்மதை மற்றும் கிருஷ்ணா
B) தப்தி மற்றும் நர்மதை
C) கிருஷ்ணா மற்றும் தப்தி
D) கோதாவரி மற்றும் கிருஷ்ணா

97. பூமி தன்னைத் தானே முழுமையாக சுற்றுவதற்கு ஆகும் காலம்
A) 24 மணி 56 நிமிடம் B) 24 மணி 37 நிமிடம்
C) 24 மணி 15 நிமிடம் D) 24 மணி

98. சூரியனுக்கு அதிக தூரத்தில் உள்ள கிரகம்
A) சனி B) யுரேனஸ்
C) நெப்டியூன் D) புளூட்டோ

99. முதல் நவீன காகித ஆலை 1832ம் ஆண்டு செராம்பூர் என்ற ஊரில் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஊர் இருக்கும் மாநிலம்
A) மத்திய பிரதேசம் B) அஸ்ஸாம்
C) மேற்கு வங்காளம் D) இவற்றுள் எதுவுமில்லை

100. இந்தியாவில் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட இரும்பு எஃகு ஆலை
A) ஜாம்ஷெட்பூர் B) ரூர்கேலா
C) சேலம் D) இவற்றுள் எதுவுமில்லை



www.recruitmentguru.com

82. **கீழ்க்கண்ட வரைபடத்தில் உள்ள மைட்டாஸிஸின் நிலை என்ன?**



A) தொடக்கநிலை B) நடுநிலை
C) பின்னடைதல் நிலை D) முடிவு நிலை

83. **கீழ்க்காணும் தானியங்களில் எது மனிதனால் முதலில் உபயோகிக்கப்பட்டது?**
A) பார்லி B) ஓட்ஸ்
C) ரை D) கோதுமை

84. **பாக்டீரியாவை தாக்கும் வைரஸ்கள்**
A) ஆர்போவைரஸ்கள் B) வைரேமியா
C) பாக்டீரியோஃபேஜ் D) பாக்டோஃபென்

85. **எய்ட்ஸ் நோய் பரவுவதற்கான காரணம்**
A) இரத்தம் மாற்றுதல், கொசு கடித்தல், எச்சில் மூலம்
B) உறுப்பு மாற்றுதல், கைக்குலுக்கும்போது, இரத்தம் மாற்றுதல்
C) எச்.ஐ.வி. பாதிப்பு ஏற்பட்டவருடன் உடலுறவை மேற்கொள்ளுதல், எச்சில் மூலம், கைக்குலுக்கும்போது
D) இரத்தம் மாற்றுதல், எச்.ஐ.வி. பாதிப்பு ஏற்பட்டவருடன் உடலுறவை மேற்கொள்ளுதல், உறுப்பு மாற்றுதல்

86. **கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறிக :**
A) பித்த உப்புக்கள் – சிறு திவளை களாக்குதல்
B) வெள்ளையணுக்கள் – நோய் எதிர்ப்புத் தன்மை
C) நெப்ரான் – நரம்பு மண்டலம்
D) மாலைக்குருடு – வைட்டமின் 'ஏ'

87. **டி.என்.ஏ. மூலக்கூறு சுருளின் விட்டம்**
A) 20 Å B) 30 Å
C) 40 Å D) 50 Å

88. **பல உணவுச் சங்கிலிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்ட சிக்கலான அமைப்பு**
A) உணவு பிரமிடு B) உணவு உலகம்
C) உணவு ஆற்றல் D) உணவு வலை

89. **எய்ட்ஸ் நோயினை உறுதி செய்யும் சோதனை**
A) எலைசா சோதனை
B) வெஸ்டன் பிளாட் சோதனை
C) அமில–கார சோதனை
D) இவற்றுள் எதுவுமில்லை

90. **இரத்த சோகையின் போது**
A) வெள்ளை அணுக்கள் அதிகரிக்கின்றன
B) சிவப்பு இரத்த அணுக்கள் குறைகின்றன
C) சிவப்பு இரத்த அணுக்கள் அதிகரிக்கின்றன
D) வெள்ளை அணுக்கள் குறைகின்றன

91. **தமிழ்நாட்டில் பெட்ரோலியம் கிடைக்கப் பெறும் டெல்டா பகுதி**
A) தாமிரபரணி B) வைகை
C) காவிரி D) பாலாறு

92. **தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி மையம்**
A) கும்பகோணம் B) ஆடுதுறை
C) தஞ்சாவூர் D) பாபநாசம்

93. **தமிழ்நாடு பின்வரும் பருவகாலத்தில் அதிக மழை அளவைப் பெறுகிறது**
A) வடகிழக்கு மழைப் பருவகாலம்
B) தென்மேற்கு மழைப் பருவகாலம்
C) கோடைகாலம்
D) குளிர்காலம்

94. **இந்தியாவில் தென்மேற்கு பருவக்காற்று காலம்**
A) ஜூன் முதல் செப்டம்பர் வரை
B) ஜனவரி முதல் மார்ச் வரை
C) ஏப்ரல் முதல் அக்டோபர் வரை
D) அக்டோபர் முதல் பிப்ரவரி வரை

95. **பாலகாட்டு கணவாய் இந்த மலைத் தொடரில் அமைந்துள்ளது**
A) கிழக்கு தொடர்ச்சி மலைகள்
B) விந்திய மலைத் தொடர்கள்
C) சாத்பூரா மலைத் தொடர்கள்
D) மேற்கு தொடர்ச்சி மலைகள்

96. **அரபிக் கடலை நோக்கி பாய்ந்து செல்லும் ஆறுகள்**
A) நர்மதை மற்றும் கிருஷ்ணா
B) தப்தி மற்றும் நர்மதை
C) கிருஷ்ணா மற்றும் தப்தி
D) கோதாவரி மற்றும் கிருஷ்ணா

97. **பூமி தன்னைத் தானே முழுமையாக சுற்றுவதற்கு ஆகும் காலம்**
A) 24 மணி 56 நிமிடம் B) 24 மணி 37 நிமிடம்
C) 24 மணி 15 நிமிடம் D) 24 மணி

98. **சூரியனுக்கு அதிக தூரத்தில் உள்ள கிரகம்**
A) சனி B) யுரேனஸ்
C) நெப்டியூன் D) புளூட்டோ

99. **முதல் நவீன காகித ஆலை 1832ம் ஆண்டு செராம்பூர் என்ற ஊரில் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஊர் இருக்கும் மாநிலம்**
A) மத்திய பிரதேசம் B) அஸ்ஸாம்
C) மேற்கு வங்காளம் D) இவற்றுள் எதுவுமில்லை

100. **இந்தியாவில் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட இரும்பு எஃகு ஆலை**
A) ஜாம்ஷெட்பூர் B) ரூர்கேலா
C) சேலம் D) இவற்றுள் எதுவுமில்லை



www.recruitmentguru.com

# பொதுத்தமிழ்

101. "காராண்மை போல ஒழுகுதல்" இவ்வுவமையால் அறியலாகும் பொருள்
A) வள்ளண்மை B) மழை
C) ஒழுக்கம் D) கார் காலம்

102. உவமையால் அறியப்படும் பொருள் எழுதுக : "செய்தி காட்டுத் தீ போல் பரவியது"
A) விரைவு B) துன்பம்
C) வேதனை D) பயனின்மை

103. உவமையால் விளக்கப் பெறும் பொருளை எழுதுக : "அரண்மனை மாதிரி வீடு"
A) சிறியது B) குறுகியது
C) இருண்டது D) பெரியது

104. உவமையால் விளக்கப்படும் பொருளை எழுதுக : "கடுகுபோல் உள்ளம் கொண்டோன்"
A) பெருமை B) சீர்மை
C) சிறுமை D) நீர்மை

105. "இலவு காத்த கிளி போல" – என்னும் உவமையால் விளக்கப்படும் பொருள்
A) பறந்து போதல்
B) ஏமாந்து போதல்
C) மறந்து போதல்
D) மகிழ்ந்து போதல்

106. இயைபுத் தொடையை எடுத்துக் கூறுக : "பொதியிலாயினும் இமய மாயினும் பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும்"
A) பொதியிலாயினும் – பொதுவறு
B) பொதுவறு – சிறப்பின்
C) இமயமாயினும் – புகாரேயாயினும்
D) சிறப்பின் – இமயமாயினும்

107. "பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும் செல்வ முடைக்கும் படை"
இதில் அமைந்துள்ள எதுகையினை அறிக :
A) பல்பொருள் – செல்வம்
B) வெஃகும் – சிறுமையும்
C) செல்வம் – இம்மூன்றும்
D) பல்பொருள் – வெஃகும்

108. "வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா" என்ற தொடரில் அமைந்துள்ள மோனைச் சொற்கள் அறிக.
A) வசையிலா – குன்றும்
B) வண்பயன் – இசையிலா
C) வசையிலா – வண்பயன்
D) குன்றும் – இசையிலா

109. "நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற"
இதில் அமைந்துள்ள எதுகையினைக் கண்டறிக.
A) நகையும் – உவகையும்
B) கொல்லும் – சினத்தின்
C) பகையும் – உளவோ
D) நகையும் – பகையும்

110. "உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை" இத்தொடரில் அமைந்த எதுகையை அறிக.
A) உள்ளம் – உடைமை
B) உடைமை – உடைமை
C) உடைமை – உள்ளம்
D) பொருளுடைமை – உடைமை

111. "நீர்வேலி" என்பதன் இலக்கணக் குறிப்பைத் தேர்க :
A) உருவகம் B) வேற்றுமைத் தொகை
C) வினைத் தொகை D) பண்புத் தொகை

112. "இரவும் பகலும்" என்பதன் இலக்கணக் குறிப்பைத் தேர்க :
A) உவமைத் தொகை B) உருவகம்
C) எண்ணும்மை D) உம்மைத் தொகை

113. "நிலை இய" – என்பதன் இலக்கணக் குறிப்பு :
A) சொல்லிசையளபெடை
B) இன்னிசையளபெடை
C) செய்யுளிசையளபெடை
D) ஒற்றளபெடை

114. இலக்கணக் குறிப்பு வரைக : "ஏவரும்"
A) வலித்தல் விகாரம் B) மெலித்தல் விகாரம்
C) நீட்டல் விகாரம் D) தொகுத்தல் விகாரம்

115. இலக்கணக் குறிப்பு வரைக : "நெடுந்தேர்"
A) உம்மைத் தொகை B) பண்புத் தொகை
C) உவமைத் தொகை D) வினைத் தொகை

116. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக : "சினம்இனமென்னும் ஏமப்புணையைச் சுடும்"
A) இனமென்னும் ஏமப்புணையைச் சுடுவது எது?
B) ஏமப்புணையைச் சுடுவது எது?
C) ஏமப்புணை என்றால் என்ன?
D) இனமென்பது யாரைக் குறிக்கின்றது?

117. "அனந்த கவிராயர் பாட்டுக்கும் பரிசு பெறுவார் பேச்சுக்கும் பரிசு பெறுவார்" என்ற விடைக்குரிய வினாவை எழுதுக.
A) அனந்த கவிராயர் பாட்டுக்கும் பேச்சுக்கும் பரிசு பெற்றவரா?
B) பாட்டுக்கும் பேச்சுக்கும் பரிசு உண்டா?
C) அனந்த கவிராயர் எதற்கெல்லாம் பரிசு பெற்றார்?
D) அனந்த கவிராயர் பேச்சினால் கவரப் பட்டவரா?



www.recruitmentguru.com

118. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :
"திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்"
A) திரிகடுகத்தின் சிறப்பு யாது?
B) திரிகடுகம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றா?
C) மூன்று மருந்துகளின் பெயரைக் கொண்ட நூல் யாது?
D) திரிகடுகம் என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?

119. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு :
"இளங்கோவின் காவியப் பெண்மணி கண்ணகி"
A) கண்ணகிதான் இளங்கோவின் காவியப்பெண்மணியா?
B) இளங்கோவின் காவியப் பெண்மணி யார்?
C) காவியப் பெண்மணி கண்ணகி என்கிறாரா இளங்கோ?
D) இளங்கோவின் காவியப் பெண்மணி கண்ணகிதான் என்பதை அறியாதவர் உளரோ?

120. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க :
"உடற்பயிற்சி உடலை வலிமையாக்கும்"
A) உடற்பயிற்சியினால் நன்மை உண்டா?
B) உடற்பயிற்சி செய்வது ஏன்?
C) உடற்பயிற்சி தேவைதானா?
D) உடற்பயிற்சி எதனை வலிமையாக்கும்?

121. "கல்" – இதன் வினைமுற்றைக் காண் :
A) கற்று B) கற்பித்து
C) கற்ற D) கற்றான்

122. 'வா' – இச்சொல்லின் வினையெச்சம் காண்க.
A) வந்த B) வந்தான்
C) வாடினான் D) வந்து

123. வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக : "குழை"
A) குழைந்த B) குழைந்தான்
C) குழைந்து D) குழைந்தன

124. 'கா' என்ற வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைக் காண்க :
A) காப்பார் B) காத்து
C) காத்தான் D) காப்பாத்து

125. 'பாடு' என்ற வேர்ச் சொல்லின் தொழிற்பெயர்
A) பாடினான் B) பாடிய
C) பாடுவாள் D) பாடுதல்

126. சொற்களை அகர வரிசைப்படி தருக :
A) உழும், அழும், ஆடும், ஈடு
B) அழும், ஈடு, உழும், ஆடும்
C) அழும், ஈடு, ஆடும், உழும்
D) அழும், ஆடும், ஈடு, உழும்

127. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் :
A) தாய்மொழி, தேன், தமிழ், துறை
B) தமிழ், துறை, தாய்மொழி, தேன்
C) தமிழ், தாய்மொழி, துறை, தேன்
D) தேன், துறை, தாய்மொழி, தமிழ்

128. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல் :
A) பாரதி, போற்றி, பெயர், படி
B) போற்றி, பாரதி, படி, பெயர்
C) படி, பாரதி, பெயர், போற்றி
D) பெயர், படி, போற்றி, பாரதி

129. அகர வரிசைப்படி சொற்களைக் கூறுக :
A) தடம், படம், குடம், மடம்
B) படம், குடம், மடம், தடம்
C) குடம், தடம், படம், மடம்
D) மடம், குடம், படம், தடம்

130. கீழ்க்கண்ட சொற்களை அகர வரிசைப்பட எழுதுக
A) அரசன், காவலன், ஈசன், கொல்லன்
B) காவலன், அரசன், கொல்லன், ஈசன்
C) கொல்லன், அரசன், காவலன், ஈசன்
D) அரசன், ஈசன், காவலன், கொல்லன்

131. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :
A) திரு B) இலக்குமி
C) செல்வம் D) வறுமை

132. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :
A) நகை B) அழுகை
C) இளிவரல் D) கலித்தொகை

133. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :
A) மா B) பலா
C) முல்லை D) வாழை

134. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :
A) திங்கள் B) செவ்வாய்
C) வியாழன் D) செப்டம்பர்

135. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக :
A) கங்கை B) காவிரி
C) தாமிரபரணி D) சேலம்

136. சந்திப்பிழை இல்லாத தொடரைக் காண் :
A) ஊறுக்காய் வைத்தால் பழையச் சோறு உள்ளே போகாதா?
B) ஊறுகாய் வைத்தால் பழையச் சோறு உள்ளேப் போகாதா?
C) ஊறுக்காய் வைத்தால் பழைய சோறு உள்ளே போகாதா?
D) ஊறுகாய் வைத்தால் பழைய சோறு உள்ளேப் போகாதா?

137. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக :
A) பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றன
B) பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றது
C) பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றவை
D) பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றனர்

138. மரபுப் பிழை நீங்கிய தொடரை எழுதுக :
A) தென்னை இலையால் கீத்து பின்னுவார்கள்
B) தென்னை இலையால் கீற்று முடைவார்கள்
C) தென்னை ஓலையால் கீத்து முடைவார்கள்
D) தென்னை ஓலையால் கீற்று பின்னுவார்கள்



www.recruitmentguru.com

139. வழூஉச் சொல் அற்ற தொடரை எழுதுக :
A) ஆத்துல மீன்கள் அதிகம்
B) ஆற்றில் மீன்கள் அதிகம்
C) ஆட்றில் மீன்கள் அதிகம்
D) ஆறில் மீன்கள் அதிகம்

140. பிறமொழிச் சொற்கள் நீக்கிய தொடரைக் காண் :
A) "மகாராஜாவின் உத்தரவுப்படி மந்திரி உபகாரம் செய்தார்"
B) "மகாராஜாவின் ஆணைப்படி மந்திரி உதவி செய்தார்"
C) "பேரரசர் உத்தரவுப்படி மந்திரி உபகாரம் செய்தார்"
D) "பேரரசர் ஆணைப்படி அமைச்சர் உதவி செய்தார்"

141. பொருத்துக :

| | பொருள் | | சொல் |
|---|---|---|---|
| a) | ஏளனம் | 1) | குருசு |
| b) | தொண்டர் | 2) | சோரன் |
| c) | திருடன் | 3) | தொழும்பர் |
| d) | சிலுவை | 4) | ஆகடியம் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

142. சொல்லையும் பொருளையும் அறிந்து பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | நாவாய் | 1) | மக்கள் இனம் |
| b) | கேண்மை | 2) | கப்பல் |
| c) | மன்பதை | 3) | சிங்கம் |
| d) | அரிமா | 4) | நட்பு |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

143. பொருத்துக :

| | சொல் | | பொருள் |
|---|---|---|---|
| a) | பொதும்பர் | 1) | இரவு |
| b) | புயம் | 2) | சினம் |
| c) | முனிவு | 3) | சோலை |
| d) | அல் | 4) | தோள் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

144. நூல் பொருத்துக :

| | நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|---|
| a) | ஓர் இரவு | 1) | மு.வரதராசனார் |
| b) | கரித்துண்டு | 2) | பாரதியார் |
| c) | குயில்பாட்டு | 3) | பாரதிதாசன் |
| d) | அழகின் சிரிப்பு | 4) | அறிஞர் அண்ணா |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 3 | 2 | 1 | 4 |

145. பொருத்துக :

| | நூல் | | நூலாசிரியர் |
|---|---|---|---|
| a) | இரட்சணிய யாத்திரிகம் | 1) | அண்ணாமலை ரெட்டியார் |
| b) | திரிகடுகம் | 2) | திரிகூடராசப்பக் கவிராயர் |
| c) | குற்றாலக் குறவஞ்சி | 3) | எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை |
| d) | காவடிச் சிந்து | 4) | நல்லாதனார் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 1 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 1 | 2 | 4 | 3 |

146. கிருத்தவக் கம்பன் எனப் போற்றப்பட்டவர்
A) சேக்கிழார்
B) கம்பர்
C) எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை
D) இளங்கோவடிகள்

147. கப்பலோட்டிய தமிழன் என்று கூறப்பட்டவர்
A) நேதாஜி
B) வ.உ.சிதம்பரனார்
C) இராஜாஜி
D) வீரபாண்டிய கட்டபொம்மன்

148. மண் தேய்த்த புகழினான் எனச் சுட்டப்படுபவன் யார்?
A) அனுமன் B) கோவலன்
C) இராமன் D) பரதன்

149. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல்
A) சிலப்பதிகாரம் B) பாரதியார் கவிதைகள்
C) திருக்குறள் D) கம்பராமாயணம்

150. இரட்டைக் காப்பியம் என அழைக்கப்படுவது
A) வளையாபதியும் குண்டலகேசியும்
B) மணிமேகலையும் சீவக சிந்தாமணியும்
C) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
D) குண்டலகேசியும் சிலப்பதிகாரமும்



www.recruitmentguru.com

151. எவ்வகை வாக்கியம் எனக் கண்டு எழுதுக :
"தந்தை பெரியார் சமுதாயத்தைத் திருத்த எண்ணிக் கடுமையாக உழைத்து, இறுதியில் வெற்றி பெற்றார்"
A) உணர்ச்சி வாக்கியம் B) கலவை வாக்கியம்
C) செய்தி வாக்கியம் D) தொடர் வாக்கியம்

152. "இளங்கோவடிகள் கதை கேட்டார்; கருத்தில் வைத்தார்; காவியம் படைத்தார்." எவ்வகை வாக்கியம் எனக் குறிப்பிடுக.
A) தொடர் வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்

153. அனந்தனுக்குக் காதேது? – எவ்வகை வாக்கியம்?
A) செய்தி வாக்கியம் B) ஏவல் வாக்கியம்
C) வினா வாக்கியம் D) கட்டளை வாக்கியம்

154. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் :
"கடலின் காட்சி கவின்மிகு காட்சியம்மா!"
A) கட்டளை வாக்கியம் B) உணர்ச்சி வாக்கியம்
C) வினா வாக்கியம் D) செய்தி வாக்கியம்

155. எவ்வகை வாக்கியம் எனத் தெளிந்து எழுதுக :
"இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி"
A) கட்டளை வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்

156. "தன்வினை" வாக்கியத்தைக் கண்டறிக.
A) ஆசிரியர் கற்பித்தார் B) மாணவர் கற்றார்
C) நான் படித்தேன் D) அன்னை ஊக்குவித்தாள்

157. செய்வினை வாக்கியம் கண்டறிக :
A) ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்
B) இலக்கணம் ஆசிரியரால் கற்கப்பட்டது.
C) உண்மை என்றும் வாழும்
D) திருக்குறளை உலகமே போற்றும்

158. செயப்பாடு வினை கண்டறிக :
A) யார் இக்கவிதையை இயற்றினார்
B) பாண்டியன் பரிசு பாவேந்தரால் படைக்கப் பட்டது
C) தமிழ் மொழி மிகவும் இனிமையானது
D) பாவேந்தர் பாண்டியன் பரிசைப் படைத்தார்

159. பிறவினை வாக்கியத்தை எழுதுக :
A) பூங்கோதை பொம்மை செய்தாள்
B) பூங்கோதை பொம்மை செய்வித்தாள்
C) பூங்கோதையின் பொம்மை இது
D) பூங்கோதையின் பொம்மை செய்தது யார்?

160. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக :
A) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றுவித்தார்
B) திருவள்ளுவரால் திருக்குறள் எழுதப்பட்டது
C) திருவள்ளுவரின் நூல் திருக்குறளாகும்
D) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்

161. ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தருக : "தா"
A) பறித்தல் B) தருதல்
C) கேட்டல் D) பார்த்தல்

162. உரிய பொருள் தரும் தொடரைத் தேர்வு செய்க : "ஆ"
A) ஆசை B) ஆடு
C) பசு D) ஆழம்

163. ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தருக : "கோ"
A) அரண்மனை B) அரசன்
C) அமைச்சு D) அரண்

164. ஓரெழுத்து ஒரு மொழி உரிய பொருளைக் கண்டறிதல்: பொருளைக் குறிப்பிடுக : "தை"
A) வாரம் B) கிழமை
C) மாதம் D) வருடம்

165. ஓரெழுத்து ஒரு மொழி உரிய பொருளைக் கண்டறிதல்: "நா"
A) நாடு B) நாடி
C) நார் D) நாக்கு

166. "நின்றார்" – வேர்ச்சொல்லைக் காண்க
A) நின் B) நில்
C) நின்று D) நின்னு

167. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க : "தின்றான்"
A) தின்று B) தின்ற
C) தின் D) தின்னு

168. "கொண்டான்" என்ற சொல்லின் வேர்ச்சொல்
A) கொண் B) காண்
C) கொள் D) கொல்

169. "கண்டான்" – இதன் வேர்ச்சொல்லினை எழுதுக
A) கண் B) கண்டு
C) கண்ட D) காண்

170. "பாடினார்" என்ற சொல்லின் வேர்ச்சொல்லை அறிக:
A) படி B) படித்து
C) பாடு D) பாடி

171. முறையாக அமைந்த சொற்றொடர் தேர்க :
A) பாரத பூமி பழம் பெரும் பூமி
B) பூமி பாரத பழம் பெரும் பூமி
C) பழம் பெரும் பூமி பாரத பூமி
D) பெரும் பூமி பாரத பழம் பூமி

172. சொற்றொடர்களை ஒழுங்குபடுத்தித் தொடராக்குக:
A) பிறர்தர வாரா தீதும் நன்றும்
B) வாரா தீதும் நன்றும் பிறர்தர
C) தீதும் பிறர்தர வாரா நன்றும்
D) தீதும் நன்றும் பிறர்தர வாரா

173. சொற்றொடர்களை ஒழுங்குபடுத்தித் தொடராக்குக:
A) அவலா கொன்றோ நாடா கொன்றோ
B) கொன்றோ நாடா கொன்றோ அவலா
C) நாடா கொன்றோ அவலா கொன்றோ
D) கொன்றோ அவலா நாடா கொன்றோ

174. சொற்களை ஒழுங்குபடுத்தித் தேர்வு செய்க :
A) மிளகு, சுக்கு, திப்பிலி, திரிகடுகம்
B) திப்பிலி, மிளகு, சுக்கு, திரிகடுகம்
C) திரிகடுகம், சுக்கு, மிளகு, திப்பிலி
D) திப்பிலி, சுக்கு, மிளகு, திரிகடுகம்



www.recruitmentguru.com

175. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக :
A) தேனினும் தமிழ் மொழி என்பர் இனிது
B) தமிழ் மொழி என்பர் இனிது தேனினும்
C) இனிது என்பர் தேனினும் தமிழ்மொழி
D) தேனினும் இனிது தமிழ் மொழி என்பர்

176. பெயர்ச் சொல்லின் வகையைக் கூறுக : "கரியன்"
A) இடப்பெயர் B) பண்புப்பெயர்
C) தொழிற்பெயர் D) சினைப்பெயர்

177. பெயர்ச் சொல்லின் வகையறிதல் : "பெறுதல்"
A) சினைப்பெயர்
B) வினையாலணையும் பெயர்
C) காலப்பெயர் D) தொழிற்பெயர்

178. பெயர்ச் சொல்லின் வகையை அறிக : "வெற்றிலை நாட்டான்"
A) பண்புப் பெயர் B) சினைப் பெயர்
C) தொழிற் பெயர் D) காலப் பெயர்

179. பெயர்ச் சொல்லின் வகை அறிக : "கோவை"
A) தொழிற் பெயர் B) இடப் பெயர்
C) காலப் பெயர் D) பொருட் பெயர்

180. பெயர்ச் சொல்லின் வகை அறிக : "மார்கழி"
A) சினைப் பெயர் B) இயற்சொல்
C) வடசொல் D) காலப் பெயர்

181. பிரித்தெழுதுக : "குறைவிலை"
A) குறைவு + இல்லை B) குறை + இல்லை
C) க்ுரை + இலை D) குறைதல் + இல்லை

182. பிரித்தெழுதுக : "திருவருள்"
A) தீம் + அருள் B) திரு + அருள்
C) தீமை + அருள் D) தீங்கு + அருள்

183. "புன்மனத்தார்" – பிரித்தெழுதுக.
A) புன்மை + மனத்தார் B) புன் + மனத்தார்
C) புன்மன + அத்தார் D) புல் + மனத்தார்

184. "அங்கண்" சரியாகப் பிரித்தெழுதப்பட்ட சொல்லைத் தேர்வு செய்க :
A) அ + கண் B) அகம் + கண்
C) அம் + கண் D) அங் + கண்

185. "நீரதன்" – பிரித்து எழுதுக
A) நீர் + ரதன் B) நீ + ரதன்
C) நீர் + அதன் D) நீர்மை + அதன்

186. "சிறுமை" – இதன் எதிர்ச்சொல் என்ன?
A) கொடுமை B) நன்மை
C) பெருமை D) பெறுமை

187. "உயர்வு" – இதன் எதிர்ச்சொல் என்ன?
A) தாழ்மை B) தாழ்வு
C) தாழ்தல் D) தாழ்த்தல்

188. எதிர்ச்சொல் தேர்க : "வலம்"
A) வலப்பக்கம் B) வலது பக்கம்
C) இடம் D) இடப்பக்கம்

189. எதிர்ச்சொல் தேர்க : "சேய்மை"
A) தூய்மை B) கருமை
C) அண்மை D) உண்மை

190. "அஞ்சாமை" என்ற சொல்லின் எதிர்ச்சொல் தருக :
A) எஞ்சாமை B) அஞ்சுதல்
C) பயப்படாமை D) மனத்திண்மை

191. ஆங்கில சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லறிக : "Hostel"
A) சத்திரம் B) தங்கும் மனை
C) தங்கும் விடுதி D) தங்கும் பள்ளி

192. "Manager" என்பதன் சரியான தமிழ்ச் சொல் :
A) மேலாளர் B) மேற்பார்வையாளர்
C) தலைவர் D) வேலை வாங்குபவர்

193. "பிரீஃப்கேஸ்" (Briefcase) – இச்சொல்லிற்கு சரியான தமிழ்ச் சொல் தருக.
A) கைப்பெட்டி B) தூக்குப் பெட்டி
C) குறும்பெட்டி D) துணிப்பெட்டி

194. "கோர்ட்" (Court) – இணையான தமிழ்ச் சொல்லை எடுத்தெழுதுக.
A) உயர் நீதிமன்றம்
B) வழக்கு மன்றம்
C) வழக்கறிஞர் கூடுமிடம்
D) நீதிமன்றம்

195. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் கூறுக : Taluk office
A) தாலுகா ஆபிசு
B) தாலுகா அலுவல்
C) தாலுகா இடம்
D) வட்டாட்சியர் அலுவலகம்

196. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக :
உரை – உறை
A) சொல் – மூடி
B) செயல் – தலையணை
C) உரசுதல் – உராய்தல்
D) காண் – பார்

197. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக :
இரை – இறை
A) தேடுதல் – பாடுதல்
B) தீனி – கடவுள்
C) சாதம் – தள்ளுதல்
D) அறிதல் – உண்ணுதல்

198. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக :
அரம் – அறம்
A) வாள் – செயல்
B) ஒரு கருவியது – நல்லது
C) ஒரு கருவி – தருமம்
D) அறுத்தல் – அரைதல்



www.recruitmentguru.com

199. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க :

ஆர – ஆற

A) நிறைய – தணிய

B) நிறைத்தல் – தணித்தல்

C) நிறுத்தல் – கூறுதல்

D) நீக்கல் – தணிக்கை

200. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக :

உலை – உளை

A) உழைத்தல் – துன்பம்

B) சோறு – உள்ளம்

C) கொல்லன் உலை – பிடரி மயிர்

D) கேடு – அலைசல்

# விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (A) | 2. (D) | 3. (D) | 4. (C) | 5. (D) | 6. (A) | 7. (C) | 8. (A) | 9. (A) | 10. (D) |
| 11. (C) | 12. (A) | 13. (D) | 14. (D) | 15. (B) | 16. (D) | 17. (B) | 18. (D) | 19. (B) | 20. (D) |
| 21. (C) | 22. (A) | 23. (B) | 24. (C) | 25. (B) | 26. (A) | 27. (A) | 28. (D) | 29. (A) | 30. (C) |
| 31. (A) | 32. (B) | 33. (D) | 34. (A) | 35. (D) | 36. (A) | 37. (A) | 38. (B) | 39. (B) | 40. (C) |
| 41. (B) | 42. (D) | 43. (C) | 44. (A) | 45. (B) | 46. (C) | 47. (D) | 48. (B) | 49. (A) | 50. (C) |
| 51. (C) | 52. (D) | 53. (C) | 54. (A) | 55. (B) | 56. (A) | 57. (C) | 58. (C) | 59. (B) | 60. (A) |
| 61. (C) | 62. (B) | 63. (*) | 64. (A) | 65. (C) | 66. (B) | 67. (B) | 68. (C) | 69. (A) | 70. (B) |
| 71. (C) | 72. (D) | 73. (D) | 74. (B) | 75. (A) | 76. (D) | 77. (A) | 78. (B) | 79. (C) | 80. (C) |
| 81. (A) | 82. (C) | 83. (D) | 84. (C) | 85. (D) | 86. (C) | 87. (A) | 88. (D) | 89. (B) | 90. (B) |
| 91. (C) | 92. (B) | 93. (A) | 94. (A) | 95. (D) | 96. (B) | 97. (*) | 98. (D) | 99. (C) | 100. (A) |
| 101. (A) | 102. (A) | 103. (D) | 104. (C) | 105. (B) | 106. (C) | 107. (A) | 108. (C) | 109. (D) | 110. (B) |
| 111. (A) | 112. (C) | 113. (A) | 114. (C) | 115. (B) | 116. (A) | 117. (C) | 118. (D) | 119. (B) | 120. (D) |
| 121. (D) | 122. (D) | 123. (C) | 124. (A) | 125. (D) | 126. (D) | 127. (C) | 128. (C) | 129. (C) | 130. (D) |
| 131. (D) | 132. (D) | 133. (C) | 134. (D) | 135. (D) | 136. (*) | 137. (B) | 138. (D) | 139. (B) | 140. (D) |
| 141. (D) | 142. (D) | 143. (A) | 144. (B) | 145. (C) | 146. (C) | 147. (B) | 148. (B) | 149. (C) | 150. (C) |
| 151. (B) | 152. (A) | 153. (C) | 154. (B) | 155. (A) | 156. (B) | 157. (A) | 158. (B) | 159. (B) | 160. (D) |
| 161. (C) | 162. (C) | 163. (B) | 164. (C) | 165. (D) | 166. (B) | 167. (C) | 168. (C) | 169. (D) | 170. (C) |
| 171. (A) | 172. (D) | 173. (C) | 174. (C) | 175. (D) | 176. (B) | 177. (D) | 178. (C) | 179. (B) | 180. (D) |
| 181. (A) | 182. (B) | 183. (A) | 184. (C) | 185. (C) | 186. (C) | 187. (B) | 188. (C) | 189. (C) | 190. (B) |
| 191. (C) | 192. (A) | 193. (C) | 194. (D) | 195. (D) | 196. (A) | 197. (B) | 198. (C) | 199. (A) | 200. (C) |

# விளக்கமான விடைகள்

**10. (D)** இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி திருமதி. பிரதீபா பாட்டீல்

**101. (A)** திரிகடுகம் – பாடல் எண். 6

**63. (*)** கொடுக்கப்பட்ட அனைத்து விடைகளும் தவறானவை. சரியான விடை : ரூ.17,957

**97. (*)** கொடுக்கப்பட்ட அனைத்து விடைகளும் தவறானவை. சரியான விடை : 23 மணி 56 நிமிடம் 4.091 வினாடி

**136. (*)** கொடுக்கப்பட்ட அனைத்து விடைகளும் தவறு. ஊறுகாய் வைத்தால் பழைய சோறு உள்ளே போகாதா? என்பதே சரியான விடை.



www.recruitmentguru.com